# Kanchipuram DT

## முதல் திருப்புதல் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி | பொருளியல் | மதிப்பெண்கள் : 90

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:- 20×1=20

1) "விருப்பங்களோடும் கிடைபருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றி பயில்கின்ற அறியவியலே பொருளியலாகும்" என்று இலக்கணம் வகுத்தவர்

அ) இலயனல் ராபின்ஸ் ஆ) ஆடம்ஸ்மித் இ) ஆல்ஃபிரட் மார்ஷல் ஈ) பால் சாமுவேல்சன்

2) பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது?

அ) விலைக்கோட்பாடு ஆ) வருமானக் கோட்பாடு

இ) வேலைவாய்ப்புக் கோட்பாடு ஈ) வணிகக் கோட்பாடு

3) இயல்பெண் பயன்பாட்டு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர்

அ) ஜே.ஆர்.ஹிக்ஸ் ஆ) ஆர்.ஜி.டி.ஆலன் இ) மார்ஷல் ஈ) ஸ்டிக்லர்

4) சமநோக்கு வளைகோட்டின் அடிப்படையானது

அ) தரவரிசை ஆய்வு ஆ) இயல்பெண் ஆய்வு

இ) பண்பளவை ஆய்வு ஈ) உளவியல் ஆய்வு

5) சராசரி உற்பத்தி(AP)யைக் கணக்கிடப் பயன்படும் விகிதம்

அ) $\frac{\Delta TP}{N}$ ஆ) $\frac{\Delta TP}{\Delta N}$ இ) $\frac{TP}{MP}$ ஈ) $\frac{TP}{N}$

6) நவீன பொருளியல் வல்லுனர்களின் விதி

அ) வளர்ந்து செல்விகித அளவு ஆ) குறைந்த செல்விகித அளவு

இ) மாறா விகித அளவு ஈ) மாறும் விகித அளவு

7) செலவு என்பது

அ) விலை ஆ) மதிப்பு இ) மாறாச் செலவு ஈ) உற்பத்தி

8) கூலி ________ செலவுக்கு எடுத்துக்காட்டாகும்

அ) மாறா ஆ) மாறும் இ) இறுதிநிலை ஈ) வாய்ப்பு

9) விலையின் மற்றொரு பெயர் ________

அ) சராசரி வருவாய் ஆ) இறுதிநிலை வருவாய்

இ) மொத்த வருவாய் ஈ) சராசரி செலவு

10) விலை தலைமை அம்சம் கொண்டது

அ) நிறைவு போட்டி ஆ) முற்றுரிமை

இ) சில்லோர் முற்றுரிமை ஈ) முற்றுரிமையாளர் போட்டி

11) நிலத்திற்கு உண்மையானதும் அழிக்க முடியாத சக்தியும் உள்ளது என்ற கருத்தைப் பயன்படுத்தியவர்

அ) J.S. மில் ஆ) வாக்கர் இ) கிளார்க் ஈ) ரிக்கார்டோ

12) துய்ப்பு தவிர்ப்பு வட்டிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர்

அ) ஆல்ஃப்ரட் மார்ஷல் ஆ) N.W. சீனியர் இ) போம் போவர்க் ஈ) நட்விக்சல்

13) ஜனநாயக சமதர்மத்தைக் கொண்டு வந்தவர்

அ) ஜவஹர்லால் நேரு ஆ) P.C. மஹலனோபிஸ்

இ) டாக்டர் இராஜேந்திர பிரசாத் ஈ) இந்திராகாந்தி

14) V.K.R.V இராவ் இவரின் மாணவராக இருந்தார்

அ) J.M. கீன்ஸ் ஆ) காலின் கிளார்க் இ) ஆடம் ஸ்மித் ஈ) ஆல்பிரட் மார்ஷல்

15) பத்தாம் ஐந்தாண்டு திட்டகாலம்

அ) 1992-1997 ஆ) 2002-2007 இ) 2007-2012 ஈ) 1997-2002

16) வருடாந்திரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட ஆண்டு?

அ) 1989 - 1991 ஆ) 1990 - 1992 இ) 2000 - 2001 ஈ) 1981 - 1983

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17) LPGக்கு எதிரான வாதம் ______
அ) பொருளாதார வளர்ச்சி ஆ) அதிக முதலீடு
இ) மக்கள் மற்றும் மண்டலங்களிடையே ஏற்றத்தாழ்வு ஈ) நவீன மயமாக்கல்

18) மறைந்திருக்கும் வேலையின்மைக்கு மற்றொரு பெயர் என்ன?
அ) திறந்த ஆ) மறைமுக இ) பருவகால ஈ) ஊரக

19) எந்த மாவட்டத்தில் குழந்தைப் பாலின விகிதம் குறைவாகவுள்ளது?
அ) மதுரை ஆ) தேனி இ) அரியலூர் ஈ) கடலூர்

20) தொகையீடு என்பது ______ என்பதின் தலைகீழ் செயல்பாடாகும்
அ) வேறுபாடு ஆ) கலவை இ) கலந்தகலவை ஈ) வகையீடு

பகுதி - II

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளி.**
**வினா எண். 30க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **7×2=14**

21) பண்டங்களை பணிகளிலிருந்து வேறுபடுத்துக.
22) நுகர்வோர் நடத்தையின் அடிப்படை அணுகுமுறைகளை குறிப்பிடுக.
23) உற்பத்தி காரணிகளை வகைப்படுத்துக
24) வெளியுறு செலவு (அ) வெளிப்படையான செலவு - வரையறு
25) விற்பனை செலவு என்றால் என்ன?
26) வாரம் - வரையறு
27) முதலீட்டை திரும்ப பெறுதல் - வரையறு
28) ஊரக ஏழ்மை - வரையறு
29) தமிழ்நாட்டின் அணுமின் நிலையங்கள் யாவை?
30) மொத்த செலவு சார்பு $TC=60+10x+15x^2$ என்றால் சராசரி செலவு சார்பு காண்க.

பகுதி - III

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளி:-**
**வினா எண்.40க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **7×3=21**

31) தேவை விரிவு மற்றும் சுருக்கத்தை வேறுபடுத்துக.
32) தொழில் முனைவோரின் பணிகள் யாவை?
33) வாய்ப்புச் செலவினை எடுத்துக்காட்டுகளுடன் வரையறு
34) நிறுவனம் மற்றும் தொழிற்சாலை - இவைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
35) கிராம சர்வோதயா - சிறுகுறிப்பு வரைக.
36) வணிக வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
37) விவசாய உற்பத்தி அங்காடிக் குழுவின் பணிகளை விவரிக்க
38) தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியை விளக்குக
39) MS Excel sheet செயல்படுவதில் உள்ள நிலைகளை விளக்குக.
40) வாரம் மற்றும் போலி வாரம் வேறுபடுத்துக.

பகுதி - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-** **7×5=35**

41) அ) பொருளியலின் தன்மை மற்றும் எல்லையை விவரி? **(அல்லது)**
ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறுதொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி?
42) அ) தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி? **(அல்லது)**
ஆ) வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரி?
43) அ) மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக. **(அல்லது)**
ஆ) 2015-2020ம் ஆண்டிற்கான ஏற்றுமதி-இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக
44) அ) பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக. **(அல்லது)**
ஆ) ஊரகப் பொருளாதாரப் பிரச்சனைகள் ஆராய்க.
45) அ) நிறைவுப் போட்டியில் எவ்வாறு விலை மற்றும் உற்பத்தி அளவு தீர்மானிக்கப்படுகிறது? **(அல்லது)**
ஆ) ஊரக கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.
46) அ) ரிக்கார்டோவின் வாரக்கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி. **(அல்லது)**
ஆ) தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி?
47) அ) இந்திய பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி. **(அல்லது)**
ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன.

*********

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com